

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.6.2025) சென்னை மாநகரில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 6.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 50 கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கிவைக்கும் விதமாக, சென்னை, மெரினா கடற்கரை நீச்சல் குளம் அருகில் அமைக்கப்பட்டுள்ள கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், செயல் இயக்குநர் கௌரவ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் மதன்மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.6.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 217 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 26 திருக்கோயில்களில் 49 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்து, 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உதவி ஆணையர் அலுவலகம், 15 ஆய்வர் அலுவலகங்கள் மற்றும் 16 திருக்கோயில்களில் 17 முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.6.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் ச. விஜயகுமார், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.6.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வி. அமுதவள்ளி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னையில் ரூ.6.04 கோடி மதிப்பில்

# 50 கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜூன் 20 –**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.6.2025) சென்னை மாநகரில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 6.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 50 கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி விதமாக, சென்னை, மெரினா கடற்கரை நீச்சல் குளம் அருகில் அமைக்கப்பட்டுள்ள கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தை தொடங்கி வைத்து, குடிநீரை அருந்தினார்.**

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலமாக பெருநகர சென்னை மாநராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மற்றும் கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் வாயிலாக நாளொன்றுக்கு 1100 மில்லியன் லிட்டர் குடிநீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பொதுமக்களின் நலன் கருதி முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் (Water Dispensing Unit) நிறுவி பொதுமக்களுக்கு கட்டணமில்லா தரமான குடிநீர் வழங்க சென்னை குடிநீர் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க. நகர், அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம் மற்றும் அடையாறு ஆகிய மண்டலங்களில், தேர்தெடுக்கப்பட்ட இடங்களான பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், கோயில்கள், அரசு மருத்துவமனைகள், வணிக பகுதிகள், இரயில் நிலையங்கள், பள்ளிக்கூடம், கல்லூரி வளாகம், மெட்ரோ இரயில் நிலையம் மற்றும் மெரினா கடற்கரை என 50 இடங்களில் கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்கள் 6.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தானியங்கி இயந்திரங்களை 3 ஆண்டுகளுக்கு இயக்கி பராமரிப்பதற்கான பணி ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், குடிநீர் விநியோக குழாயிலிருந்து 3,000 லிட்டர் முதல் 9,000 லிட்டர் கொள்ளளவுள்ள HDPE சின்டெக்ஸ் டேங்குகளில் குடிநீர் சேகரிக்கப்பட்டு, அல்ட்ரா வடிகட்டிகள், கார்பன் வடிகட்டிகள் மற்றும் புறஊதாக் கதிர் மூலம் சுத்திகரிக்கப்பட்டு துருப்பிடிக்காத சில்வர் டேங்குகளில் சேகரிக்கப்பட்டு தானியங்கி இயந்திரங்கள் மூலம் பொதுமக்கள் 1 லிட்டர் மற்றும் 150 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட பாதுகாப்பான குடிநீர் பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தானியங்கி இயந்திரங்கள் அனைத்தும் நவீன IoT (Internet of Things) மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செயல் முறையை இணைய அடிப்படையிலான செயலி மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் குடிநீர் அளவு குறையும் போது உடனடியாக பகுதி பொறியாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, தேவையான குடிநீர் நிரப்ப நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும். திருட்டு மற்றும் சமூக விரோதிகள் மூலமாக குடிநீர் இயந்திரங்கள் சேதப்படுத்தப்படுவதை தடுக்க அனைத்து நிலையங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுசென்னை குடிநீர்வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் மூலம் கண்காணிக்கப்படும். இதன்மூலம் பொது மக்களுக்கு பாதுகாப்பான தடையில்லா சுத்திகரிக் கப்பட்ட குடிநீர் விநியோகம் உறுதி செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன்,ட் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், செயல் இயக்குநர் கௌரவ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் மதன்மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்! கழகத்தில் மாற்றுத் திறனாளிகள் அணி அறிவித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு “மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பு குழு” சார்பில் நன்றி பாராட்டு விழா!

## தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் அழைப்பு!

சென்னை, ஜூன். 20-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சராக பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டு காலங்களில் மக்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி தந்ததுடன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து தந்தும், மாற்றுத்திறனாளிகளின் சிரிப்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை காணும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு “மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பு குழு” சார்பில் சென்னையில் நன்றி பாராட்டு விழா நடைபெறுகிறது என தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத்தலைவர் ரெ. தங்கம் அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்து மாற்றுத்திறனாளிகளின் இதயங்களின் வாழ்ந்து கொண்டு வருகிறார் என்பதை மன மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும், ஒரு வரலாற்று சிறப்பு மிக்க அம்சமாக மாற்றுத்திறனாளிகள் சமூகம் “உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் பிரதிநிதித்துவம்” வழங்கிட சட்டமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றியதுடன், மதுரையில் நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க பொதுக்குழு கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் கௌரவப்படுத்தும் விதமாக, எங்களின் நீண்ட நாள் கோரிக்கையான தி.மு.கழகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான தனி அணி அறிவித்த மாற்றுத்திறனாளிகளின் காவலர், தமிழ்நாடு முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நாளை 21.6.2025, சனிக்கிழமை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் “மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பு குழு” சார்பில் மாபெரும் நன்றி பாராட்டு விழா நடைபெறுகிறது.

இம்மாநாட்டிற்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்து தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தினர் அனைவரும் குடும்பத்துடன் அலை கடலென திரண்டு வந்து, இந்தியாவில் உள்ள முதல்வர்களுக்கெல்லாம் வழிகாட்டு முதல்வராக திகழும், திராவிட மாடல் நாயகர்,தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்திட, நன்றி பாராட்டு விழாவில் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ. தங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.



திருப்பூர் மாநகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில் போக்குவரத்துத் துறையின் சார்பில் புதிய விரிவான மினிபஸ் திட்டத்தின் கீழ் பேருந்து சேவையை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாவட்டச் செயலாளர், 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன்), வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், ஆணையாளர் (பொ) ரா.மகேஸ்வரி, துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மண்டலத் தலைவர்கள் தம்பி கோவிந்தராஜ், வெ.உமா மகேஸ்வரி உள்பட மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; “அடுத்த ஆண்டு தமிழ்நாட்டைக் கையில் எடுப்போம்” என்று மாநில பா.ஜ.க. தலைவர் கூறியிருக்கிறாரே?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; தமிழ்நாட்டில், பா.ஜ.க.வின் நிலை தரைமட்டம் என்பது தரணிக்கே தெரியும். “கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை”.**

**சூரியனைக் கையால் மறைத்துவிட முடியுமா?**

**“ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை” என்று கவிஞர் முத்துக் கூத்தன் எழுதிய பாடலை, “அரச கட்டளை” திரைப்படத்தில் நயினார் அந்நாளில் கேட்டிருப்பாரே!**